# 5வது சிறுவழக்குகள் நீதிமன்றம்
## ( மோட்டார் வாகன விபத்து வழக்குகள் தீர்ப்பாயம், சென்னை)

## MCOP No. 2756/2024 & 2784/2024

| | |
|---|---|
| **சாட்சியின் வரிசை எண்** | மசா1 |
| **பெயர்** | நக்க பெத்த வெங்கட சுப்பைய்யா |
| **க/த.பெயர்** | நக்க சின்ன சுப்பைய்யா |
| **வயது** | 49 |
| **விலாசம்** | கடப்பா, ஆந்திர பிரதேசம் |
| **தொழில்** | ... |

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969 ன் பிரிவு 6ன் படி சத்திய பிராமணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 23.02.2026 ல் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். வாகன விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கும், என் தந்தை இறப்பிற்கும் இழப்பீடு கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். இதில் என்னை எனது தரப்பில் முதல் சாட்சியாக விசாரித்து கொண்டு எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதான். அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். இதில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்துக்கொள்ள வேண்டுகிறேன். முதல் தகவல் அறிக்கை மசாஆ1, குற்றப்பத்திரிக்கை மசாஆ2, இறப்பு சான்றிதழ் மசாஆ3, உடற்கூறாய்வு சான்றிதழ் மசாஆ4, வாரிசு சான்றிதழ் மசாஆ5, காப்பீடு சான்று நகல் மசாஆ6, இறந்தவரின் ஆதார் அட்டை நகல் மசாஆ7, மனுதாரரின் ஆதார்

அட்டை நகல் மசா8, மனுதாரரின் பான் அட்டை நகல் மசாஆ9, மனுதாரரின் வங்கி கணக்கு புத்தக நகல் மசாஆ10. விடுவிப்பு சான்றிதழ் மசாஆ11, ஊனச்சான்றிதழ் மசாஆ12, இயலாமை சான்றிழ் மசாஆ13, மருத்துவ பில்கள் மசாஆ14, போக்குவரத்து செலவு பில்கள் மசாஆ15, புகைப்படம் மசாஆ16, மனுதாரரின் பேன் அட்டை நகல் மசாஆ17, மனுதாரரின் ஆதார் அட்டை நகல் மசா18, மனுதாரரின் வங்கி கணக்கு புத்தக நகல் மசாஆ19.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது,

**5 வது நீதிபதி**
**சென்னை**